# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2015.06.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

ச.வ.-ஒ. 24/2015

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பின் 62 ஆம் உறுப்புரையின் திருத்தம்.*

**2.** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பின் (இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 62ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்ந்தெடுக் கப்பட்ட இருநூற்றிமுப்பத்தேழு உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றமொன்று இருத்தல் வேண்டும்.".

*அரசியலமைப் பின் 95ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**3.** அரசியலமைப்பின் 95ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

"*வரையறை ஆணைக் குழுவைத் தாபித்தல்.*

95.(1) (அ) இவ்வுறுப்புரை வலுவுக்கு வந்ததி லிருந்து மூன்று மாதங்களுள், சனாதிபதியானவர், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது அவரால் நியமிக்கப்படும் ஐந்து ஆட்களைக் கொண்ட ஒரு நிமித்த வரையறை ஆணைக்குழுவை, தேர்தல் மாவட்டங்களையும் வாக்கெடுப்புப் பிரிவுகளையும் சனாதிபதியானவர் பதினைந் தாண்டுகளுக்கொருதடவை வரையறை ஆணைக் குழுவைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், வரை யறை செய்யவென தாபித்தல் வேண்டும்.

2-PL 009100 -400 (2015/06)

(ஆ) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அரசியலில் ஈடுபடாதவர்கள் என சனாதிபதி திருப்திப்படுவோரான ஆட்களிடையேயிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(இ) சனாதிபதி அத்தகைய ஆட்களில் ஒருவரை, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது, வரையறை ஆணைக்குழுவின் தவிசாளராக விருக்கவென நியமித்தல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் இறக்குமிடத்து அல்லது பதவிவிலகுமிடத்து அல்லது அத்தகைய எவரேனும் உறுப்பினர் அவரது பணிகளை அவ்வாறு நிறைவேற்ற இயலாதவராக வந்துள்ளாரென சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது திருப்திப்பட்டால், சனாதிபதியானவர், (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, அவ்வுறுப்பினரின் இடத்துக்கு வேறோராளை நியமித்தல் வேண்டும்.

(3) வரையறை ஆணைக்குழு அதனது பணிகளை நிறைவேற்றுவதில் அதற்கு உதவும் நோக்கத்துக்காக, சனாதிபதியானவர், அத்தகைய ஆணைக்குழுவுக்கு ஒரு செயலாளரையும் அவசியமானவிடத்து, ஒரு மேலதிகச் செயலாளரையும், ஒரு பிரதிச் செயலாளரையும் அத்துடன் ஒரு உதவிச் செயலாளரையும் நியமித்தல் வேண்டும்.

(4) வரையறை ஆணைக்குழுவானது, அது அவ்வாறு அவசியமெனக் கருதினால், அதன் பணிகளை நிறைவேற்றுவதில் உதவுவதற்கு என தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் திணைக்களத்தின் எவரேனும் அலுவலரை அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திலிருந்து எவரேனும் அலுவலரை ஆணைக்குழுவின் பணியாளராக அழைக்கப்படலாம்.".

*அரசியலமைப்பின் 96 ஆம் உறுப்புரையின் திருத்தம்.*

**4.** அரசியலமைப்பின் 96 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்புக்கு 96அ என்னும் புதிய உறுப்புரையை உட்புகுத்துதல்.*

**5.** பின்வரும் புதிய உறுப்புரை அரசியலமைப்பின் 96ஆம் உறுப்புரைக்கு உடன்பின்னராக இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது 96அ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“தேர்தல் மாவட்டங்களை வாக்கெடுப்புப் பிரிவுகளாகப் பிரித்தல்.

96அ. (1) தேர்தல் மாவட்டங்களை வாக்கெடுப்புப் பிரிவுகளாகப் பிரிப்பதில் வரையறை ஆணைக்குழுவால் பின்வரும் காரணிகள் கருத்துக்கெடுக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இன, மத அல்லது வேறுவகையான அக்கறை கூட்டுச்சேர்க்கை யொன்றால் ஒற்றுமைப்படுத்தப்பட்ட, ஆனால் அந்த இடப்பரப்பிலுள்ள வாசிகளின் பெரும்பான்மையோரிலிருந்து இவ்வம்சங்களுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அம்சங்கள் தொடர்பில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் தேர்தல் மாவட்டமொன்றின் ஏதேனும் இடப்பரப்பில் செறிந்து உள்ளனரென வரையறை ஆணைக்குழுவுக்குத் தோன்றுமிடத்து, ஆணைக்குழு, அந்த அக்கறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதனை இயலச்செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறாக அத்தேர்தல் மாவட்டத்தை வாக்கெடுப்புப் பிரிவுகளாக அவ்வாறு பிரிக்கலாம்.

(ஆ) அவ்வாறு பிரிக்கையில், ஆணைக்குழு–

(i) அத்தேர்தல் மாவட்டத்தின் பல்வேறு வாக்கெடுப்புப் பிரிவுகளில் வதிகின்ற ஆட்களின்

எண்ணிக்கையிலான சமச்சீரின்மையை மிக அருகும்படி குறைப்பதற்கான விருப்பு நிலையையும்;

(ii) வாக்கெடுப்புப் பிரிவுகளின் பூகோள, பௌதீக அம்சங்களையும்; அத்துடன்

(iii) பொருளாதார அபிவிருத்தியின் அளவு மற்றும் தேர்தல் மாவட்டத்தினுள் அல்லது வாக்கெடுப்புப் பிரிவினுள் நிலவும் கலாசார பிணைப்புகளையும் உரிய கரிசனைக்கெடுத்தல் வேண்டும்.

(2) (அ) வரையறை ஆணைக்குழு -

(i) இவ்வுறுப்புரையின் (1)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள காரணிகளை கருத்துக்கெடுத்த பின்னர் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப உரித்துடைய பலவுறுப்பினர் வாக்கெடுப்புப் பிரிவுகளை உருவாக்குதல் பொருத்தமானதென; அல்லது

(ii) ஓர் உறுப்பினரைவிடக் கூடுதலாகத் தெரிந்தனுப்ப உரித்துக் கொண்ட பலவுறுப்பினர் வாக்கெடுப்புப் பிரிவுகளை, ஏதேனும் தேர்தல் மாவட்டத்தினுள் உள்ள வாக்கெடுப்புப் பிரிவுகள் அதிகரிப்பதைத் தவிர்க்கும் முகமாக உருவாக்குதல் பொருத்தமானதென; அல்லது

(iii) கடந்த காலத்தில் பலவுறுப்பினர் வாக்காளர் தொகுதிகளை உருவாக்க இட்டுச் சென்ற காரணங்கள் இப்போதும் வலிதும் ஏற்புடையதாகவுமிருக்கின்றதென,

கருதுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, ஒரு பலவுறுப்பினர் வாக்கெடுப்புப் பிரிவை அல்லது பலவுறுப்பினர் வாக்கெடுப்புப் பிரிவுகளை உருவாக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆயின் எவ்விதத்திலும், பலவுறுப்பினர் வாக்கெடுப்புப் பிரிவொன்றால் நேரடியாகத் தெரிந்தனுப்பப்பட வேண்டிய ஆகக்கூடிய உறுப்பினர் எண்ணிக்கை மூன்றை விஞ்சுதலாகாது.

(ஆ) எவ்வாறாயினும், வரையறை ஆணைக்குழுவால் உருவாக்கப்படும் பலவுறுப்பினர் வாக் கெடுப்புப் பிரிவுகளின் எண் ணிக்கை, ஆகக்குறைந்த அளவினதாக இருப்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.”.

அரசியலமைப்பின் 97, 98, 99 மற்றும் 99அ உறுப்புரைகளை மாற்றீடு செய்தல்.

**6**. அரசியலமைப்பின் 97ஆம், 98ஆம், 99ஆம் மற்றும் 99அ என்னும் உறுப்புரைகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரைகள் இடப்படுகின்றன:-

“தேர்தல் மாவட்டங்களின் அத்துடன் வாக்கெடுப்பு பிரிவுகளின் பெயர்கள் பிறவற்றைப் பிரகடனஞ் செய்தல்.

97. (1) வரையறை ஆணைக்குழு, சனாதிபதியால் தீர்மானிக்கப்படவேண்டிய, விடயத்துக்கேற்ப, அத்தகைய காலத்துள் அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலத்துள் அதற்கான பணிப்பாணையை நிறைவேற்றி முடித்தலும் அதன் பணிப்பாணையை நிறைவேற்றி முடித்ததன்மேல் அதன்மீதான அறிக்கையொன்றை சம்மதமளிக்

காத உறுப்பினர்களின் காரணங்கள் எவையுமிருப்பின் அவற்றுடன் சேர்த்து சனாதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவால் (1)ஆம் பந்தியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன்மேல், சனாதிபதி, தேர்தல் மாவட்டங்களின் பெயர்களையும், எல்லைகளையும், அத்தகைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினுள்ளும் அமையும் வாக்கெடுப்புப் பிரிவுகளின் பெயர்களையும் எல்லைகளையும் அத்துடன் ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் வாக்கெடுப்புப் பிரிவும் தெரிந்தனுப்ப உரித்துடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் பிரகடனத்தின் மூலம் வெளியிடுதல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின்கீழ் ஆக்கப்படும் பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட தேர்தல் மாவட்டங்களும் வாக்கெடுப்புப் பிரிவுகளும் அத்தகைய பிரகடனத்தின் வெளியீட்டின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்காக நடாத்தப்படும் எல்லா தேர்தல்கள் தொடர்பிலும் செயற்பாட்டுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் அரசியலமைப்பினதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தினதும் எல்லா நோக்கங்களுக்காகவும் தேர்தல் மாவட்டங்களாகவும் வாக்கெடுப்புப் பிரிவுகளாகவும் இருத்தலும் வேண்டும்.

தேர்தல் மாவட்டங்களிடையே உறுப்பினர்களைப் பங்கு போடுதல்.

98. (1) பல தேர்தல் மாவட்டங்கள் ஒன்றாகச் சேர்ந்து அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்குள் உள்ள எல்லா வாக்கெடுப்புப் பிரிவுகளையும் நேரடியாக பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென இவ்வுறுப்புரையின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்

கிணங்க, நூற்றிநாற்பத்தைந்து உறுப்பினர்களைத் தெரிந்தனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவானது, (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நூற்றிநாற்பத்தைந்து உறுப்பினர்களிலிருந்து அத்தகைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவென மொத்தமாக இருபத்தைந்து உறுப்பினர்களை அத்தகைய தேர்தல் மாவட்டங்களிடையே நியாயமானதும் ஒப்புரவானதுமான வகையில் பங்குபோடுதல் வேண்டும்:

ஆயின் ஆகக்குறைந்தது ஓர் உறுப்பினராவது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் என பங்குபோடப்படுதல் வேண்டும்.

(3) எஞ்சியுள்ள இருநூறு உறுப்பினர்களுள் நான்கு உறுப்பினர்கள் அத்தகைய பங்குபோடுதலுக்காகவல்லாவிடின் குறைப்பிரதிநிதித்துவமாகும் அக்கறையின் தொகுப்பைப் போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதாக தேர்தல் மாவட்டங்களிடையே பங்குபோடப்படுதல் வேண்டும்.

(4) எல்லாத் தேர்தல் மாவட்டங்களினதும் தேருநர் இடாப்புக்களிலுள்ள தேருநர்களின் மொத்த எண்ணிக்கையானது, நூற்றியறுபதால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரித்தலிலிருந்துவரும் விளை எண் (பின்னம் எதுவும் கணக்கிலெடுக்கப்படாது) இதனகத்துப்பின்னர் ‘‘தகைமைபெறு எண்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(5) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் தேர்தல் இடாப்பில் எத்தேருநர்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அத்தேருநர்களின்

மொத்த எண்ணிக்கை தகைமைபெறு எண்ணால் பிரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தையும், பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு அத்தகைய பிரிப்பிலிருந்து வரும் எண்ணிக்கைக்குச் சமமான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைத் தெரிந்த னுப்புவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய ஒதுக்குகைக்குப் பின்னர் அத்தகைய தேருநர்களின் எஞ்சியுள்ள எண்ணிக்கை (ஏதேனு மிருப்பின்) அவசியமாயின் இவ்வுறுப்புரையின் (6)ஆம் பந்திக்கிணங்க கையாளப்படுதல் வேண் டும்.

(6)(அ) ஐந்தாம் பந்திக்கிணங்க தகைமைபெறு எண்ணோடு தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் நிச்சயிக்கப்படுவதான எல்லாத் தேர்தல் மாவட்டங் களினாலும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை (2)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையை விடக் குறைவானதாக இருக்கின்றவிடத்து, எஞ்சிய எண்ணிக்கையான உறுப்பினர்களை தேர்தல் மாவட்டங்களிடையே எப்படிப் பங்குபோடுவது என்பது (5) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய எஞ்சிய தேருநர்களின் எண்ணிக்கை யைத் தொடர்புறுத்தி ஆகுதல் வேண்டும்.

(ஆ) ஐந்தாம் பந்திக்கிணங்க ஓர் உறுப்பினரைத் தானும் தெரிந்தனுப்ப உரித்தில்லாத ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் விடயத்தில், அத்தகைய பங்குபோடுகையானது, அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் தம் பெயர் களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் மொத்த எண்ணிக்கையையும் அத்துடன் எஞ்சிய தேருநர்க ளின் ஆகக்கூடிய தேருநர்களின் எண்ணிக்கையை

அல்லது அத்தகைய மொத்தத் தேருநர் எண்ணிக்கையைக் கொண்டுள்ள தேர்தல் மாவட்டத்தை அடிப்படையாகக்கொண்டும் ஓர் உறுப்பினரை அல்லது மேலும் ஓர் உறுப்பினரைத் தெரிந்தனுப்பு வதற்கு உரித்துடையதாக உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை நூற்றிநாற்பத்தைந்தை எட்டும்வரை அவ்வாறே தொடர்தல் வேண்டும்.

(7) விடயத்துக்கேற்ப ஐந்தாம் பந்தியின் அல்லது (6)ஆம் பந்தியின் கீழான ஒரு பங்கு போடலைச் செய்யும்போது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அத்தகைய எஞ்சிய தேருநர் எண்ணிக்கைகள் அல்லது அத்தகைய தேருநர் களின் மொத்த எண்ணிக்கை அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கை சமமாகவிருந்து, ஒரு தேருநரைக் கூட்டுவது, ஒரு மேலதிக உறுப்பி னரைத் தெரிந்தனுப்ப ஒரு தேர்தல் மாவட்டத்துக்கு உரித்தளிக்குமாயின், அந்த ஒரு தேருநரை எந்தத் தேர்தல் மாவட்டத்திற்குக் கூட்டுதல் வேண்டும் எனத் தீர்மானித்தல் திருவுளச்சீட்டின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

*விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத் துக்கும் தேர்ந் தெடுக்கப்பட உரித்துடைய உறுப்பினர் களின் எண்ணிக்கை யைத் தீர்மானித்தல்.*

99. (1) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலி ருந்தும் பாராளுமன்றத்துக்கு தெரிந்தனுப்பப்பட உரித்துடைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, இவ்வுறுப்புரையின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கிணங்க தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) தேர்தல் ஆணைக்குழு, 96ஆம் உறுப்புரை யின் (4)ஆம் பந்தியிலும் 98ஆம் உறுப்புரையின் (3)ஆம் பந்தியிலும் குறித்துரைக்கப்பட்டவிதமாக உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பங்குபோடு தலுக்கு மேலதிகமாக, எல்லா தேர்தல் மாவட்டங் களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு என மொத்த எண்ணிக்கையினரான இருநூறு உறுப்

பினர்களைத் தெரிந்தனுப்பக்கூடியவாறு, நூற் றறுபது உறுப்பினர்களை தேர்தல் மாவட்டங்க ளிடையே பங்குபோடுதல் வேண்டும்.

(3) எல்லாத் தேர்தல் மாவட்டங்களினதும் தேருநர் இடாப்புக்களில் காணப்படும் தேருநர் களின் மொத்த எண்ணிக்கை நூற்றியறுபதினால் பிரிக்கப்படுதல் வேண்டும். அப்பிரிப்பிலிருந்து வரும் பூரணை எண் (பின்னம் எதுவும் கணக்கி லெடுத்துக்கொள்ளப்படாது) இதனகத்துப்பின்னர் “இரண்டாம் தகைமைபெறு எண்” எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(4) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் தேருநர் இடாப்பில் பெயர்கள் காணப்படும் தேருநர்களின் மொத்த எண்ணிக்கையானது இரண்டாம் தகைமைபெறு எண்ணினால் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும், அத்தகைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தவென அத்தகைய பிரிப்பிலிருந்துவரும் பூரணை எண்ணுக்குச் சமமானதான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைத் தெரிந்தனுப்ப உரித்துடையதாதலும் வேண்டும். அவ்வாறு பிரித்ததன் பின்னர் எஞ்சியிருக்கும் அத்தகைய தேருநர்களின் எண்ணிக்கை, ஏதேனு மிருப்பின், அவசியமாயின், இவ்வுறுப்புரையின் (5)ஆம் பந்திக்கிணங்க கையாளப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் பந்திக்கிணங்க இரண்டாம் தகைமைபெறு எண்ணுடன் தொடர்புறுத்திப் பார்ப்பதன் மூலம் நிச்சயிக்கப்படுபவர்களான எல்லா தேர்தல் மாவட்டங்களினாலும் தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை நூற்றறுபது உறுப்பினர்

களுக்குக் குறைவானதாக இருக்கின்றவிடத்து, எஞ்சிய உறுப்பினர் எண்ணிக்கையைப் பெறுவதற் கான உரித்தை தேர்தல் மாவட்டங்களிடையே எப்படி பங்கு போடுவது என்பது, (4)ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய எஞ்சிய தேருநர் எண்ணிக்கையின் அடிப்படையிலிருத்தல் வேண்டும். (4)ஆம் பந்தியின்கீழ் செய்யப்பட்ட தீர்மானிப்புக்கிணங்க ஓர் உறுப்பினரைத் தானும் தெரிந்தனுப்ப உரித்துப்பெறாத ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் விடயத்தில், அத்தகைய பங்குபோடுதல் அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டி ருக்கும் தேருநர்களின் மொத்த எண்ணிக்கை அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்; ஆகக்கூடிய எஞ்சிய தேருநர் தொகையை அல்லது அத்தகைய ஆகக்கூடிய மொத்தத் தேருநர் தொகையைக் கொண்டுள்ள தேர்தல் மாவட்டம் மேலும் ஓர் உறுப்பினரைப் பெற உரித்துடையதாதல் வேண்டும்; இவ்வாறே, நூற்றறுபது உறுப்பினர் களும் தேர்ந்தெடுக்கப்படும்வரை, இம்முறை தொடரும்.

(6) நாலாம் அல்லது (5)ஆம் பந்தியின்கீழான ஒரு பங்குபோடலைச் செய்யும்போது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட எஞ்சிய தேருநர் எண்ணிக்கைகள் சமமாக இருந்து அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொத்தத் தேருநர் எண்ணிக்கைகள் சமமாக இருந்து அல்லது அவற்றின் ஏதேனும் சேர்க்கை சமமாக இருந்து, ஒரு தேருநரை கூட்டுவது, ஒரு மேலதிக உறுப்பினரை தெரிந்தனுப்ப ஒரு தேர்தல் மாவட்டத்துக்கு உரித்தளிக்குமாயின், அந்த ஒரு தேருநரை எந்த தேர்தல் மாவட்டத்திற்குக் கூட்டுதல் வேண்டு மென்பது திருவுளவுச்சீட்டின் மூலம் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

(7) தேருநர்கள் இடாப்பில் பெயர் காணப்படும் ஒவ்வொரு தேருநரும், அத்தகைய தேருநரின் பெயர் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டத்திலுள்ள தேர்தல் இடாப்பில் காணப்படுகின்றமை எவ்வாறிருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர் களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் ஒவ்வொரு தேர்தலிலும் ஒரு வாக்குக்கு உரித்து டையவராதல் வேண்டும்.

(8) தேர்தல்கள் ஆணையாளர் எல்லாத் தேர்தல் மாவட்டங்களுக்குமான தேருநர் இடாப்புக்களை சான்றுப்படுத்தியதன் பின்னர் இயன்றளவு விரைவாக, 97ஆம் உறுப்புரையின் கீழும் இவ்வுறுப்புரையின்கீழும் ஆக்கப்பட்ட பிரகடனத் தின் பயனாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் தெரிந்தனுப்ப உரித்துக்கொண்ட உறுப்பினர் களின் எண்ணிக்கையை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சான்றுப் படுத்துதல் வேண்டும்.

(9) ''தேருநர் இடாப்பு'' எந்தத் தேருநர் இடாப்பின் அடிப்படையில் ஒரு தேர்தல் நடாத்தப் படுகின்றதோ அப்போதைக்கு நடைமுறையிலுள்ள அந்தத் தேருநர் இடாப்பு எனப் பொருளாகும்.

**வாக்கெடுப்புப் பிரிவுகளை பிரதி நிதித்துவப் படுத்துவதற்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்தல்.**

99அ. (1)(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது (இதனகத்துப்பின்னர் "சுயேச்சைக் குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுயேச்சை வேட்பாளர்களாக போட்டியிடுகின்ற ஓர் ஆட்கள் குழு 98ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக் காக, எத்தேர்தல் மாவட்டத்தில் அத்தகைய கட்சி அல்லது குழு போட்டியிட முன்னுகின்றதோ அவ்வொவ்வொரு தேர்தல் மாவட்டம் தொடர் பிலும் –

(i) ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு தொடர்பிலும் பெயர்குறித்து நியமிக்கப் படும், விடயத்துக் கேற்ப, வேட்பாளரின் அல்லது வேட்பாளர்களின் பெயர் களையும்;

(ii) அத்தகைய தேர்தல் மாவட்டத்திலி ருந்து தெரிந்தனுப்பப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக் கைக்கும் அத்தகைய மாவட்டத்தி லுள்ளான வாக்கெடுப்புப் பிரிவுகளி லிருந்து நேரடியாகத் தெரிந்தனுப்பப் படுவதற்கு உரித்துள்ள உறுப்பினர் களின் எண்ணிக்கைக்குமிடையேயான வித்தியாசத்துக்குச் சமமான எண்ணை மூன்றால் அதிகரித்து அத்தகைய மாவட்டம் தொடர்பில் மேலதிக வேட் பாளர்களின் பெயர்களையும்,

தருவதாக ஒரு பெயர்குறித்த நியமனப்பத்தி ரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) முரணான ஏற்பாடு எது எவ்வாறிருப்பினும், (1)(அ)பந்தியின்கீழ் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் உள்ள மொத்த வேட்பாளர்களின் பத்து நூற்றுவீதத் துக்குக் குறையாது (பின்னம் எதுவும் கணக்கி லெடுக்கப்படாது) விடயத்துக்கேற்ப, பெண்களை அல்லது எவ்வகையிலும் ஆகக் குறைந்தது பெண் ணொருவரை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (அ) தேர்தலொன்றில் பாராளுமன்றத்துக்கு ஓர் உறுப்பினரைத் தெரிந்தனுப்ப உரித்துடைய தாயுள்ள ஒரு வாக்கெடுப்புப் பிரிவு தொடர்பில்

அத்தகைய வாக்கெடுப்புப் பிரிவு ஒவ்வொன்றிலும் அளிக்கப்பட்ட வலிதான வாக்குகளில் அதிக எண்ணிக்கையான வாக்குகளை பெற்ற வேட்பாளர், பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக விடயத்துக்கேற்ப, தேர்தல்கள் ஆணையாளரால் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினரைத் தெரிந்தனுப்ப உரித்துடையதாயுள்ள ஒரு வாக்கெடுப்பு பிரிவு தொடர்பில், விடயத்துக்கேற்ப, அளிக்கப்பட்ட வலிதான வாக்குகளில் இரண்டாவதாக அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் அல்லது இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களும் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக விடயத்துக்கேற்ப, தேர்தல்கள் ஆணையாளரால் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) ஏதேனும் வாக்கெடுப்புப் பிரிவு தொடர்பில், வேட்பாளர்கள் சமமான எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றிருந்து விடயத்துக்கேற்ப, ஒரு வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் ஒரு வாக்கை சேர்த்தல் விடயத்துக்கேற்ப, ஒரு வேட்பாளரை அல்லது வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க இயலச்செய்யுமிடத்து, விடயத்துக்கேற்ப, தேர்தல்கள் ஆணையாளர் அல்லது தெரிவத்தாட்சியலுவலர் திருவுளச்சீட்டு மூலம், வேட்பாளருக்கு அல்லது எவ்வேட்பாளர்களுக்கு அத்தகைய வாக்கை சேர்த்தல் வேண்டுமென்பதை தீர்மானித்தல் வேண்டும்.

தேர்தலொன்றில் கிடைத்த வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் விகிதாசார முறைமையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் தேர்தல்.

99.ஆ(1) ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, இவ்வுறுப்புரையின் அடுத்துறும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில், ஏதேனும் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வலிதான வாக்குகளில் மூன்று நூற்று வீதத்துக்குக் குறைவாக வாக்களிக்கப்பெற்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியும் சுயேச்சைக் குழுவும், ஒரு வாக்கெடுப்புப் பிரிவிலிருந்து நேரடியாக தவிரவும் நீங்கலாகவும், அந்த தேர்தல் மாவட்டத்துக்கென உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படுதற்குத் தகைமையிழந்ததாதல் வேண்டும்.

(ஆ) எவையேனும் அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக்குழுக்கள் 2 (அ) பந்தியின்கீழ் அத்தேர்தல் மாவட்டத்துக்கென உறுப்பினரரொருவர் தேர்ந்தெடுக்கப்படுதற்கு தகைமையிழந்ததாயுள்ளவிடத்து, அப்போது, அத்தகைய தேர்தலில் அத்தகைய அரசியற்கட்சிகளாலும் அல்லது சுயேச்சைக்குழுக்களாலும் பெறப்பட்ட மொத்த வாக்குகள் அந்த தேர்தல் மாவட்டத்திலான தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாக்குகளின் கழிப்பின்பின்வரும் வாக்குகளின் எண்ணிக்கை இதனகத்துப்பின்னர் இவ்வுறுப்புரையில் ''இயைபான வாக்கு எண்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(இ) இயைபான வாக்கு எண்ணானது, அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கென தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையில்

ஒன்றைக்குறைத்து வருவதால் பிரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரித்தலிலிருந்து வரும் எண் ஒரு பூரணியாகவிருப்பின், அப்பூரணி அல்லது அந்த எண் ஒரு பூரணியாகவும் பின்னமாகவும் இருப்பின் அப்பூரணியிலும் பின்னத்திலும் பார்க்க அடுத்தபடி கூடியதாக வுள்ள பூரணி இதனகத்துப்பின்னர் இவ்வுறுப் புரையில் “விளை எண்” எனக் குறிப்பீடு செய்யப் படும்.

(3) (2) (அ) என்னும் பந்தியின்கீழ் தகைமை யிழந்தனவான அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி கள் அல்லது சுயேச்சைக்குழுக்கள் நீங்கலாக, அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி மற்றும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, பின்னர், ஆகக்கூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழுவிலிருந்து தொடங்கி விளை எண்ணால் பிரிக்கப்படுதல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர், விளை எண்ணால் அத்தகைய ஒவ்வோர் கட்சியும் அல்லது குழுவும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை பிரித்த பின்பு வரும் எண்ணுக்குச் சமமான உறுப்பினர் களின் எண்ணிக்கையொன்றுக்கு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழு உரித்துடையதாதல் வேண்டுமென வெளிப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பிரிப்பிலிருந்து வரும் பூரணை எண் (பின்னம் எதுவும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படாது) கருத்துக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், அந்த தேர்தல் மாவட்டத்தில் ஆகக்கூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழு, பங்குபோடப்பட்ட உறுப்பினர் களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஒரு உறுப்பினரைப் பெற உரித்துடையதாதல் வேண்டும்.

(4) (அ) மூன்றாம் பந்தியின்கீழ் விளை எண்ணுக்கிணங்கக் குறிப்பிட்ட ஏதேனும் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தெரிந்தனுப்பப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவாகவிருக்கு மிடத்து, தேர்தலில் பேட்டியிட்ட ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் உறுப்பினர்களினது எஞ்சிய எண்ணிக்கைக்கான உரித்தைத் தீர்மானித்த லானது, ஒவ்வோர் அரசியற்கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளை விளை எண்ணினால் பிரித்ததன் பின்னர் எஞ்சியுள்ள வாக்குகளின் அடிப்படையின் மீது அல்லது எவரேனும் உறுப்பினரைப் பெற்றிராதுள்ளவையும் ஆனால் (3) ஆம் பந்திக் கிணங்க உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துடையவையுமான அந்த அரசியற்கட்சி களினால் அல்லது குழுக்களினால் பெறப்பட்ட வாக்குகளினது எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) உட்பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட இந்த அடிப்படையின் மீது, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தேர்ந்தேடுக்கப் படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த

எண்ணிக்கையும் பூர்த்தி செய்யப்படும் வரை வாக்குகளின் அதியுச்ச எண்ணிக்கையைப் பெற்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கும் அல்லது சுயேச்சைக்குழுவுக்கும் மேலதிக உறுப்பினரொருவர் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் அல்லது (4) ஆம் பந்தியின்கீழ் உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கையில் அத்தகைய தேர்தல் மாவட்டத்தில் அத்தகைய எஞ்சிய தேருநர்களின் எண்ணிக்கையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளுக்கிடையே அல்லது அத்தகைய வாக்குகளின் இரண்டோ அதற்கு மேற்பட்ட மொத்த எண்ணிக்கைகளுக்கிடையே அல்லது அவைகளுள் ஏதேனும் சேர்க்கையிடையே சமமானதன்மை உள்ளதெனவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகளை சேர்த்தல், மேலதிக உறுப்பினரொருவரைத் தெரிந்தனுப்புவதற்கு அத்தகைய கட்சியை அல்லது குழுவை உரித்துடையதாக்குமெனவும் காணப்படுமிடத்து, அத்தகைய வாக்கு அல்லது வாக்குகள் எக்கட்சிக்கு அல்லது குழுவுக்குச் சேர்க்கப்படுதல் வேண்டும் என்பது திருவுளச்சீட்டின் மூலமானதாகவிருத்தல் வேண்டும்.

(6) அத்தகைய தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தேர்ந்தெடுக்கப்டுவதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை (2) ஆம் பந்தியின்கீழ் தகைமைபெறும் எண்ணுக்கிணங்கக் குறிப்பான வொரு தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட

வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குக் குறைவாக அல்லது அதிகமாக இருக்குமிடத்து, அவ்வாறு குறைக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட அத்தகைய உறுப்பினர்களின் எண்ணிக்கை இவ்வுறுப்புரையின் பின்னுறும் ஏற்பாடுகளுக்கிணங்கப் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(7) இரண்டாம் பந்தியின்கீழ் விளை எண்ணுக்கு இணங்க தேர்தல் மாவட்டத்தினுள் அமைந்த வாக்கெடுப்புப் பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை விடக் குறைவானதாக இருக்குமிடத்து, அத்தகைய தேர்தலில் போட்டியிட்ட ஆனால் தேர்ந்தெடுக் கப்படாத ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழு உரித்தாகவரும் எஞ்சிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல், ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுக்காகவும் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியிலிருந்தான அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்தான வேட்பாளர்களினால் (வாக்கெடுப்புப் பிரிவுகளின் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்தி) இயைபான வாக்கெடுப்புப் பிரிவுகளில் பெறப்பட்ட வாக்குகளின் நூற்றுவீதத்தின் அடிப்படையின்மீதாதல் வேண்டுமென்பதுடன், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்து

வதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை எட்டப்படும் வரை அதியுச்ச நூற்றுவீதத்தைப் பெற்ற வேட்பாளரிலிருந்து தொடங்கி கீழ் நோக்கு கிரமத்தில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்.

ஆயின், ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் தலைவர், இப்பந்தியின்கீழ் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தேர்ந்தெடுக்கப் படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேற்படாதோரை பெயர்குறித்து நியமிப்பதற்கு உரித்துடையவராயிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அங்கீகரிக் கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழு, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் நியதிகளின்படி ஒரு மேலதிக உறுப்பினருக்கு மட்டுமே உரித்துடையதாக இருக்குமிடத்து, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவர், அதியுச்ச நூற்றுவீதத்தைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குப் பதிலாக, அத்தகைய வாக்கெடுப்புப் பிரிவில் போட்டியிட்டு ஆனால் தேர்ந்தெடுக்கப்படாத பொருத்தமான வேட்பாளரொருவரைப் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(8) இரண்டாம் பந்தியின்கீழ் விளை எண்ணுக்கு இணங்க ஏதேனும் குறிப்பான தேர்தல் மாவட்டத் தின் வாக்கெடுப்புப் பிரிவுகளை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கென ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களது எண்ணிக்கை யானது, அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்து விகிதாசார

மாகப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கை யைவிட கூடுதலானதாகவிருக்குமிடத்து, தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழுவுக்கான எஞ்சியுள்ள எண்ணிக்கையினரான உறுப்பினர்க ளுக்கான உரித்தைத் தீர்மானித்தல், 99ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இறுநூறு உறுப்பினர்களை 62ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்துக்குப் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையான இருநூற்றிமுப்பத்தேழு உறுப்பினர்களிலிருந்து கழிப்பதிலிருந்து பெறப்படுதல் வேண்டும்.

(9) தொண்ணூற்றொன்பதாம் உறுப்புரையின் (2)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட இருநூறு உறுப்பினர்கள் பாராளுமன்றப் பொதுத் தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ரென வெளிப்படுத்தப்பட்ட பின்னர், தேருநர் களினால் அளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை யினவான செல்லுபடியான வாக்குகளைக் குறிப்பீடு செய்து ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட மொத்த எண்ணிக்கையினவான செல்லுபடியான வாக்குகளின் அடிப்படையில் அத்தகைய பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடையே தேசிய நிரலிலிருந்து முப்பத்தேழு உறுப்பினர்களான எஞ்சிய எண்ணிக்கையினரின் பூர்வாங்க ஒதுக்கமொன் றைத் தேர்தல்கள் ஆணையாளர் உடனடியாகச் செய்தல் வேண்டும். ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினாலும் அல்லது சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட உறுப்பினர்களின்

எண்ணிக்கை, தேசிய நிரலிலிருந்து அத்தகைய கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்குப் பங்குபோடப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக் கையை விஞ்சுமிடத்து, அப்போது, விஞ்சுதலான எண்ணிக்கை முதலில் தேசிய நிரலிலிருந்து கழிக்கப்பட்டு எஞ்சிய எண்ணிக்கையினர், அந்தந்தக் கட்சிகளினால் அல்லது குழுக்களினால் பெறப்பட்ட வாக்குகளின் நூற்றுவீதத்துக் கிணங்கப் பங்குபோடப்படுதல் வேண்டுமென்பது டன், அத்தகைய பங்குபோடுதலின் நோக்கத்துக் காக, (2) முதல் (8) வரையிலான பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(10) ஏதேனும் வாக்கெடுப்புப் பிரிவை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு என தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினரொருவர் விலகுவதன் காரணமாக அல்லது விலக்கப்படுவதன் காரணமாக அல்லது அத்தகைய உறுப்பினரின் கட்சி உறுப்பாண்மை முடிவுறுத்தப்படுவதன் காரணமாக அல்லது இறப்பு காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக வாக்கெடுப்புப் பிரிவில் வெற்றிடம் ஒன்று எழுகின்றவிடத்து, தேர்தல்கள் ஆணையாளர் அத்தகைய வாக்கெடுப்பு பிரிவுக் காக இடைத்தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின்கீழ் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினரொருவர் தொடர்பில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து, அத்தகைய அரசியற்கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சை குழுவின் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களிலிருந்து அல்லது பெயர்நியமனங் கள் கொடுக்கப்பட்டுள்ள ஆனால் வாக்கெடுப்புப் பிரிவிலிருந்து போட்டியிடாத எவரேனும் மேலதிக வேட்பாளர்களுளிருந்து குறிப்பான வாக்கெடுப்புப்

பிரிவுக்கான உறுப்பினரொருவரைப் பெயர்குறித்து நியமிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப் பார் :

ஆயின், பாராளுமன்ற உறுப்பினரொருவர் விலக்கப்படும் விடயத்தில், சொல்லப்பட்ட ஒரு மாத காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய உறுப்பினர் எழுத்திலான மனுமூலம் உயர்நீதிமன் றத்துக்கு விண்ணப்பித்து உயர்நீதிமன்றம் அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றதன்மேல் அத்தகைய விலக்குகை செல்லுபடியற்றதெனத் தீர்மானித்தால், அவரது ஆசனம் வறிதாதலா காது என்பதுடன் அத்தகைய மனு உயர்நீதி மன்றத்தின் மூன்று நீதிபதிகளினால் விசாரணை செய்யப்படுதலும் வேண்டும் ; அத்தகைய மனு கோப்பிடப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களி னுள் அவர்கள் தீர்மானத்தைச் செய்தல் வேண் டும். விலக்குகை செல்லுபடியானதென உயர்நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய தீர்மானத்தேதியன்று வெற்றிடம் ஏற்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பாராளுமன்ற உறுப்பினராகவுள்ள அதன் உறுப்பினருக்கெதிராக எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான ஏதேனும் விடயத்தில் நீதிமன்றமெதுவும் நியாயாதிக்கம் கொண்டிருத்த லாகா தென்பதுடன், அதற்கிணங்க நீதிமன்றமெது வும், அத்தகைய ஏதேனும் நடவடிக்கையை அல்லது உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையைத் தடுக்கின்ற, தடைப்படுத்துகின்ற அல்லது தடைசெய்கின்ற ஓர் எழுத்தாணையை, தடையுத்தரவை, கட்டாணையை அல்லது வேறேதேனும் நிவாரணத்தை

வழங்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தலாகாது. உயர் நீதிமன்றம் இவ்வுறுப்புரைகளின் கீழ் எழக்கூடிய ஏதேனும் விடயத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்குப் புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**7**. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்